**அட்டாளைச்சேனை பிரதேச சபை - 2023**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக பெறப்பட்ட 1,111 புத்தகங்களின் பெறுமதி ரூபா 255,995 தொகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான நிதிகூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கம் மேற்கொள்ளப்படும். | சொத்தாக வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 11,118,150 தொகை மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டியதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், அத் தொகை நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான நிதிகூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கம் மேற்கொள்ளப்படும். | பெறவேண்டிய கட்டணமாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கபட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1),(2), (3) | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட 06 காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 562,244 தொகை தொடர்பில் சபை உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | உரியவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தவறும் பட்சத்தில் சபையின் வருமானமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 13,776,717 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,091,768 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 350,000 | 167,235 | 167,235 | - | 350,000 | 146,200 | 146,200 | - |
| (ii) | வாடகை | 13,975,000 | 11,625,839 | 8,901,169 | 2,724,670 | 11,960,000 | 9,954,669 | 8,583,869 | 1,370,800 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,372,000 | 1,133,450 | 1,010,450 | 123,000 | 1,542,000 | 757,475 | 757,475 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 20,805,000 | 20,431,478 | 19,469,592 | 961,885 | 15,930,000 | 15,769,748 | 13,698,423 | 2,071,324 |
| | கூட்டுத் தொகை | 36,502,000 | 33,358,002 | 29,548,446 | 3,809,555 | 29,782,000 | 26,628,092 | 23,185,967 | 3,442,124 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 07 வருடங்களிற்கு மேற்பட்ட நிலுவையாக உள்ள குத்தகை ரூபா 273,300 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நபர்களை அடையாளம் காணமுடியாமல் உள்ளதால் அதனை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் 235 வியாபார நிறுவனங்களுக்கு வருடாந்த வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலப்பகுதிக்குள் வியாபார அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த அனுமதி வழங்கல் நடவடிக்கையினை துரிதப்படுத்தல் வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 1,583,267 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைத் தீர்வையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முத்திரைத் தீர்வையினை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் சேதனப்பசளை உற்பத்தி நிலையம், 2022 ஆம் ஆண்டு மாதாந்தம் ரூபா 667,500 தொகையில் வாடகைக்கு விடுவதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு ரூபா 3,000,000 தொகை முற்பணமாக பெறப்பட்டிருந்த போதிலும், குறித்த காலப்பகுதியில் சபைக்கு எவ்வித வாடகை மற்றும் மின்சார கட்டணங்கள் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை செலுத்துமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக குறித்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. | மாதாந்தம் உரிய முறையில் வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் பயன்படுத்தப்படுவதுமான 33 காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப்பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டிடங்களினை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீடு செய்து கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான நீண்டகாலமாக பழுதடைந்து காணப்படும் 10 வாகனங்களை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்து பதிவழிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்வதற்கும், ஏனைய வாகனங்களினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆதன முகாமைத்துவ சுற்றநிருப இல: 05/2020 இற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் 266 பயனாளிகளினால் நீரிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு வெட்டப்பட்ட வீதிகளினை மீள்சீரமைப்பதற்காக ரூபா 556,000 தொகை வைப்பாக அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகள் மீள்சீரமைக்கப்பட்டு வைப்புத் தொகை மீளளிக்கவோ அல்லது அவ் நிதியை கொண்டு சபை மறுசீரமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் முடிவடைந்த வீதிகளுக்கான வைப்புப்பணத்தை மீள வழங்குவதற்கும் மற்றும் மீளபெறப்படாத வைப்புப்பணங்கள் வருமானமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | மீள் சீரமைப்பதற்கு அவசியமான நடவடிக்கையினை துரிதப்படுத்தல் வேண்டும். |
| (இ) | வேறு நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட 07 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்காக கணிசமான சுங்கத் தீர்வையினால் உரிமை மாற்றம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | உரிமையினை மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 31 வாகனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகள் மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீடு செய்து கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்கங்களுக்கிணங்க அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக பதிவு செய்யப்பட்டிருந்த 130 தொழில் நிறுவனங்கள் மீளாய்வாண்டில் புதுப்பித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை | மேலும் முறைமைப்படுத்தி மற்றும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய சட்டங்களின் பிரகாரம், அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் வேலைத்திட்டத்தின் கீழ் திராய்கேணி முன்பள்ளி பாடசாலைக்கான கட்டிட புனர்நிர்மாண வேலைகள், நிலம் நிரப்பல், சுற்று மதில்கள் அமைத்தல், சிறுவர் பூங்கா விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான தளபாடக் கொள்வனவு ஆகியவற்றிற்கு 2022 ஆம் ஆண்டில் தொடக்கம் மீளாய்வாண்டு வரை ரூபா 5,281,850 செலவு செய்யப்பட்டிருந்தும், அதனை பூரணப்படுத்தி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பூரணமாக பூர்த்தி செய்து பாவனைக்குட்படுத்தும் பொருட்டு வேலைகளை LDSP நிதித் திட்டத்தின் கீழ் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட புனர்நிர்மாண வேலையினை பூரணப்படுத்தி உரிய நோக்கம் அடைவதனை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |